# எல்லோருக்கும் வணக்கம்!

அல்லையூரின் அன்பான மக்களே! நீங்கள் பிறந்து வளர்ந்து வாழ்ந்த மண் என்றவகையில், அந்த மண்ணின் மைந்தர்கள் நீங்கள், அந்த மண்ணின் பெருமை கொண்ட பெண்கள் நீங்கள், எமது மண்ணை மறந்துவிட்டீர்களா, அங்கு வாழும் எமது மக்களை மறந்துவிட்டீர்களா! நீங்கள் மறக்கவில்லை என்றால்!
ஒரு கோரிக்கையை உங்களிடம் வைக்கின்றேன்!

எமது அல்லையூரின் முன்னேற்றத்திற்காகவும், மக்களின் வாழ்க்கைக்கான அத்தியாவசிய தேவைகளுக்காகவும், அதற்கான பல வேலைத்திட்டத்தை அல்லையூர் இணையம் பல செய்து இருக்கிறார்கள், செய்து வருக்கிறார்கள், குறிப்பாக ஒரு வைத்தியசாலை, இது ஒரு பெரிய சாதனையான நடவடிக்கை, இதற்காக முதலில், அல்லையூர் இணையத்திற்கும் அதற்காகப் பாடுபட்ட அன்பர்களுக்கும் மனமார்ந்த நன்றிகள், இவர்கள் அபூர்வமாகச் செயல்படுகிறார்கள்! இவர்களை பெயர் சொல்லி பாராட்டி எழுதினாலே அல்லையூர் இணையம் பெயரை வெளியிட விரும்புகிறார்கள் இல்லை, அத்தகைய நல்ல பண்பு கொண்ட பிள்ளைகள் அல்லைப்பிட்டியின் மைந்தர்கள், இன்று அல்லையூர் இணையத்தை நடத்திகொண்டு இருக்கிறார்கள்! எனவே! இவர்களை மீண்டும் மனதார வாழ்த்துகின்றேன்.

எனது வேண்டுகோள் என்னவென்றால்!

1. அல்லையூர் இணையம் 2012 ம் ஆண்டுக்கான அல்லைப்பிட்டியின் முன்னேற்றத்திற்கான, மக்கள் தேவைக்கான திட்டத்தை, தேவையை, அதற்கான மதிப்பீடை எடுக்கவேண்டும்.

2. அதற்கான நிதியை புலம் பெயர் நாட்டிலுள்ள எமது மக்களிடமிருந்து பெற்று இத்திட்டத்தை ஆரம்பித்தல் வேண்டும்.

3. செய்யும் திட்டம், அல்லையூர் இணையத்தின் நிர்வாகத்தின் கீழ் திட்டமிட்டு, ஒவ்வொரு திட்டத்தையும் நிறைவு செய்யவேண்டும்.

4. அல்லைப்பிட்டியின் திட்டத்தில், மாணவர்களின், மக்களின், ஏழை மக்களின், பாதிக்கப்பட்ட, உதவியற்ற மக்களின் துயரை துடைக்க செய்யவேண்டிய வேலைதிட்டத்திற்கான, சகல தேடுதல்களையும், நிர்வாகங்களையும் ஏற்படுத்தி எமது மக்களையும், நாம் பிறந்த கிராமத்தையும் எம்மால் முடிந்த அளவில் அதன் தேவைகளை பூர்த்தி செய்யவேண்டும்.

5. எனவே! புதிய ஆண்டு வருவதற்கு முன்! எமது மக்கள் புலம் பெயர்ந்து வாழும் மக்கள், தாங்களாக முன்வந்து, உங்கள் தொடர்புகளைத் தந்து, அங்கத்தவர்களாக பதிவு செய்யுங்கள், இதன் மூலம், நீங்கள் எம்முடன் தொடர்பில் இருக்கின்றீர்கள் என்பதை நாம் அறிவோம். பின்னர் உங்களுக்கு எமது திட்டங்களை, செய்திகளை அனுப்புவோம்!
6. நீங்கள் உங்களால் முடிந்த பங்களிப்பை, நீங்கள் விரும்புவது போல், எமது தேவைக்கு ஏற்ப உதவலாம், அல்லது மாதம் ஒரு தடவையோ அல்லது வருடத்திற்கு ஒரு தடைவையோ, உங்கள் பிறந்த நாள் வரும் பொழுதோ, உங்கள் கிராம மக்களுக்கு, உங்கள் பிறந்த கிராமத்திற்கு, நீங்கள் படித்த பாடசாலைக்கு. உங்கள் உறவுகளுக்கு என பல வடிவில் உதவலாம், வாருங்கள்! உங்கள் மண்ணை மறந்துவிட்டீர்களா! உங்கள் பிறந்த பூமியை மறந்துவிட்டீர்களா! உங்களுக்கு நாட்டுப்பற்று, உங்கள் உறவுகளின் பாசம், நண்பரின் நேசம் இருக்கிறதா! சிந்தியுங்கள், வாருங்கள்!

7. மார்கழி மாதம் தொடங்கிவிட்டது நீங்கள் உங்கள் அங்கத்தவ உரிமையைப் பெற உடனே கீழ்காணும் மின்னஞ்சல் முகவரிக்கு உங்கள் முழுப்பெயர், பிறந்த திகதி, (விரும்பினால் புகைப்படம்) மற்றும் தொடர்பிற்கான தகவல்களுடன் அனுப்பிவையுங்கள்! தை மாதத்தில் உங்கள் அங்கத்தவர்களுக்கான விபரங்கள் இணைக்கப்படவுள்ளன! நீங்கள் அங்கத்தவராக இருக்கும் பட்சத்தில் இணையத்தின் விளம்பர சலுகைகள் உங்களுக்கு உண்டு.

8. நீங்கள் பயந்துவிடாதீர்கள் உங்களிடம் காசு ஏதோ வில்லங்கமாக கேட்கப்போகின்றோம் என்று!

9. நாம் எமது கிராமத்தையும், மக்களையும் காக்கும் ஒரு சக்தியாக, அன்புள்ள மனிதர்களாக வாழ்ந்து சாக விரும்புகின்றோம். எமக்காக வாழ்வதை விட பிறருக்காக வாழ்வது தான் வாழ்க்கை, அழியாத வாழ்க்கை, அது தான் வாழ்க்கை! 2012 எமது இலட்சியத்தின் ஆண்டாக நாம் கருதுகின்றோம்! எமது சிந்தனைபோல் நீங்களும் சிந்தித்தால், அழும் எமது மக்கள் உங்கள் பெருமை சொல்லி மகிழ்வில் சிரிப்பார்களே.

10. நாம் எமது மண்ணை மறக்கவில்லை, எமது மக்களை மறக்கவில்லை என்றால், நாம் ஒன்று சேரவேண்டும். அடம்பன் கொடி போல, காக்கை இனம்போல ஒற்றுபடுங்கள், பெலமடையுங்கள், உங்கள் ஒற்றுமை கண்டு அல்லைப்பிட்டி மகிழ்ச்சியடையும், நாம் பிறந்த மண்ணை மறந்தவர்கள் அல்ல என்பதை எமது மக்கள் அறிந்து எம்மை போற்றுவார்கள், ஏச மாட்டார்கள், எமது கிராமம் முன்னேற, அயல் கிராமம் முன்னேற, கிராம முன்னேற்றமே நகரத்தின் முன்னேற்றம் என்பது தெரியாதவர்களா நாம்! துன்பம், துயரம் நீக்கி நின்மதியாக எமது மக்கள் வாழ நாம் செயல்படவேண்டியது எமது கடமை, உங்கள் எண்ணங்களை எழுதுங்கள், அதோடு செயல்படுங்கள்!

11. எத்தனையோ அல்லைப்பிட்டி உறவுகள் உதவுகிறார்கள், நீங்களும் வாருங்கள், உங்கள் பிறந்த தினத்திலாவது உங்கள் கிராமத்தின் முன்னேற்றத்திற்காக, அந்த மண்ணில் வாழும் மக்களுக்காக, உங்களைச் சுமந்த மண், உன் தாயையும் சுமந்த மண், எவ்வளவு பெரிய கடமை எமக்கு இருக்கிறது.

12. எம்மை சுமந்து, எமது சுவாசக் காற்றில் கலந்து, எமது விழிகளில் நிறைந்து, மனதில் பதிந்து, பாசத்தில் நனைந்த அந்த கிராமம், அதன் மக்கள், உறவுகள், நண்பர்கள், அன்பர்கள், கோவில்கள், பாடசாலைகள், தோட்டங்கள், வயல்கள், கடல், வானம், மணல், பனை மரங்கள் இவைகள் எமது வரவைக் காத்துக் கொண்டு இருக்கின்றன! இப்படி நாம் செய்யவேண்டிய கடமைகள், பணிகள், நிறைய ஒழிந்து இருக்கின்றன. உங்கள் மனங்களை திறவுங்கள், ஒவ்வொரு நாட்டிலும் இருந்து அங்கத்தவர்கள் சேரப்போகின்றார்கள்,

13. தை மாதம் எனது பிறந்தநாளின் இந்தப்பணியை சுவிஸ் நாட்டில் நான் முன்னொடுக்கப்போகிறேன்! எனது மண்ணுக்கும், எமது உறவுகளுக்கும் என்றும் நாம் பாசமுள்ளவர்களாக, நேசமுள்ள வர்களாக, வாழ்வதே இலட்சிய வாழ்வு! நீங்களும் வாருங்கள்! அல்லையூர் இணையம் உங்களை இணைக்கக் காத்திருக்கிறது! பல நாடுகளிலுள்ள துடிப்புள்ள, பிறசினேகமுள்ள அல்லையூர் மக்களே இந்த திட்டத்தை உடனே செயல்படுத்த ஒவ்வொருவரும் முந்துங்கள்! 2012ம் ஆண்டு எமது நாட்டிற்காக, எமது கிராமத்திற்காக, எமது மக்களுக்காக என வாழ்வோம்! விடுதலை அடைவோம் வாருங்கள்!

14. நாம் ஒவ்வொருவரும் விடுதலை அடைவோம், அன்பாக வாழுவோம், மற்றவர்களுக்காக, எமது கிராமத்திற்காக, நாட்டுக்காக என வாழ்ந்து பாருங்கள் அதுதான் மகிழ்ச்சியான வாழ்க்கை, கூழ் என்றாலும் குளித்துகுடி என்பதை விட, கூழ் என்றாலும் பகிர்ந்து குடி என்பது தான் சரியானது, அவ்வாறு நாம் சேர்ந்து கூழ்குடித்த அந்த இன்பம் என்று வரும் என நீங்கள் நினைத்திருந்தால், நீங்கள் அல்லைப்பிட்டியில் வாழ்வை அனுபவித்து வாழ்ந்தவர் என கூறலாம்.

15. எனவே! 2012 அல்லைப்பிட்டி எமது நேசக் கிராமம், அன்பு கிராமம், நாம் பிறந்து வளர்ந்த கிராமம், கிராமம் பேசாது, அந்த கிராமத்தை, நேசிப்பவர்கள் பேசுவார்கள்! நீங்களும் பேசுங்கள், உதவிக்கரம் நீட்டுங்கள்! உங்களை எமது மக்களும், கிராமமும், நாடும் போற்றட்டும்! அந்த பெருமை கூட அல்லைப்பிட்டிக்கே உரித்தாகும்!


உங்கள் அன்பின்

அல்லையூர் மகன்

அருள் தெய்வேந்திரன் - சுவிஸ்சர்லாந்து

தொடர்பிற்கு!

அல்லையூர் இணையம்

மின் அஞ்சல் info@allaiyoor.com தொலைபேசி 0033669543640 தொலைநகல் 0033157426694